www.Padasalai.Net

"தேர்தல் திருவிழா, தேசத்தின் பெருவிழா"

# பாராளுமன்ற பொதுத் தேர்தல் – 2024
# திருப்பத்தூர் மாவட்டம்

## வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான 2–ஆம் கட்ட பயிற்சி

**பயிற்சி நாள்: 07.04.2024.**

## வாக்குப்பதிவிற்கும் முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

1) வாக்குப்பதிவிற்கு முந்தைய நாள் நண்பகல் 12.00 மணிக்குள் வாக்குச்சாவடிக்கு சென்றடைய வேண்டும்.

2) வாக்குப்பதிவிற்கு தேவையான தேர்தல் பொருட்கள், வாக்குப்பதிவு இயந்திரங்கள், மண்டல அலுவலர்கள் ஒப்படைக்கும் போது பட்டியல்படி சரியாக உள்ளதா? என சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

3) வாக்குச்சாவடியில் தேவையான நாற்காலிகள், மேஜைகள், குடிநீர் வசதி, மின்சாரம், கழிப்பறை வசதி மற்றும் சாய்தல மேடை ஆகியவை இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

www.Padasalai.Net

## வாக்குப்பதிவிற்கும் முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

4) வாக்குச்சாவடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பிற அலுவலர்களின் வருகையை உறதி செய்துகொள்ளவேண்டும்.

5) வாக்குச்சாவடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பிற அலுவலர்களின் வருகையை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

6) தங்களுக்கு வாக்குச்சாவடிக்கு பெறப்பட்ட குறிப்பிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் அனைத்து பக்கங்களும் விடுபாடின்றி உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## வாக்குப்பதிவிற்கும் முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

7) வாக்குச்சாவடிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பிற அலுவலர்களின் வருகையை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

8) வாக்குச்சாவடிக்கு வெளியே வாக்காளர்களின் விவரம், வாக்குச்சாவடி பரப்பு, போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல், ஆகிய சுவரொட்டிகளை நன்கு தெரியும் வகையில் ஓட்டப்பட வேண்டும்.

9) 100 மீட்டர் சுற்றளவிற்குள் எந்தவித அரசியல் விளம்பரங்களோ, 200 மீட்டர் சுற்றளவிற்குள் அரசியல் கட்சி அலுவலகங்கள் ஏதும் அமைக்கப்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும்.

www.Padasalai.Net

## வாக்குப்பதிவிற்கும் முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

10) வாக்குச்சாவடியில் வழங்கப்பட்டுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களை (CU, BU & VVPAT) 19.04.2024 காலை 05.00 மணி வரை அவற்றுக்கான பெட்டிகளிலிருந்து வெளியே எடுக்கக்கூடாது.

11) வாக்குப்பதிவு இயந்திரம் (Ballot Unit), கட்டுப்பாட்டு கருவி (Control Unit), VVPAT ஆகியவை வைக்கப்படும் இடத்தில் போதுமான அளவு வெளிச்சம் இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

12) மாதிரி வாக்குப்பதிவு செய்வதற்கு முன்பாக Control Unit –னை இரவு நேரத்தில் ஆன் செய்து பயன்படுத்தக்கூடாது.

## வாக்குப்பதிவிற்கும் முந்தைய நாள் வாக்குச்சாவடிக்கு சென்றவுடன் மேற்கொள்ள வேண்டிய பணிகள்

13) Ballot Unit மற்றும் VVPAT கருவி வைப்பதற்கான Voting Compartment –ஐ இரவே பொருத்திக்கொள்ள வேண்டும். அதில், மூன்று புறமும் ஒட்டப்பட வேண்டிய Sticker களை தவறாமல் ஒட்டப்பட வேண்டும்.

www.Padasalai.Net

# வாக்குப்பதிவு முகவர்களுக்கான குறிப்புகள்

1) வாக்குப்பதிவு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ள நபர்கள், நியமன கடிதத்தை வாக்குச்சாவடி தலைமை அலுவலரிடம் அளித்து அடையாள அட்டை (Entry Pass) பெற்றுக்கொள்ள வேண்டும்.

2) முகவர்கள் அடையாள அட்டையை அனைவருக்கும் தெரியும் வகையில் அணிந்திருக்க வேண்டும்.

3) கட்சி சின்னங்கள், வேட்பாளர்களின் சின்னங்கள் ஆகியவற்றை முகவர்கள் பயன்படுத்தக்கூடாது.

# வாக்குப்பதிவு முகவர்களுக்கான குறிப்புகள்


4) ஒரு வேட்பாளருக்கு இரண்டு மாற்று முகவர்கள் அனுமதிக்கப்படுவர். ஒரே நேரத்தில் ஒரு வேட்பாளர் சார்பில் ஒரு முகவர் தவிர வேறு முகவர்கள் இருக்க கூடாது.

5) முகவர்கள் வாக்குச்சாவடியை விட்டு வெளியே செல்லும்போதோ, திரும்ப வரும் போதோ, எந்த ஒரு ஆவணத்தையும் கொண்டு செல்லவோ, கொண்டு வரவோ, அனுமதி கிடையாது.

6) முகவர்களை வாக்குப்பதிவு இயந்திரத்தில் உள்ள வேட்பாளர்கள் வரிசைப்படி அமர வைக்க வேண்டும்.

7) பிற்பகல் 3.00 மணிக்கு பின்னர் முகவர்கள் வாக்கு சாவடியை விட்டு வெளியே செல்லவோ, உள்ளே வரவோ அனுமதி கிடையாது

# மாதிரி வாக்குச்சாவடி வரைபடம்



வாக்குப்பதிவு நாள்
19.04.2024
காலை 07.00 –
மாலை 06.00 வரை.

# வாக்குப்பதிவு இயந்திரங்களை இணைப்பது எப்படி?



Control Unit VVPAT Ballot Unit

1) CU, BU & VVPAT கருவிகளை அவற்றின் பெட்டிகளிலிருந்து வெளியே எடுக்கவும்.

2) VVPAT கருவி வைத்திருக்கும் இடத்தில் மிகவும் பிரகாசமான வெளிச்சம் தரக்கூடிய பல்புகளை பயன்படுத்தக்கூடாது

# வாக்குப்பதிவு இயந்திரங்களை இணைப்பது எப்படி?

3) VVPAT கருவியில் பின்புறம் கிடைமட்டமாக உள்ள Switch –யை கடிகார எதிர்த்திசையில் திருப்பி செங்குத்தான நிலையில் வைக்க வேண்டும்.

4) Ballot Unit – 02 –யை Ballot Unit –01 –ன் பின்புறம் உள்ள connector –உடன் இணைக்க வேண்டும்.

5) Ballot Unit – 01 கருவியினை அதற்குரிய கேபிள் மூலம் VVPAT கருவியின் பின்புறமாக இணைக்க வேண்டும்.

## வாக்குப்பதிவு இயந்திரங்களை இணைப்பது எப்படி?


6) VVPAT கருவியினை அதற்குரிய கேபிள் மூலம் Control Unit கருவியின் பின்புறமாக இணைக்க வேண்டும்.

7) Control Unit Switch –ஐ On செய்ய வேண்டும்.

8) அப்போது Control Unit –ல் VVPAT –கருவியின் நிலை, Ballot Unit –நிலை, Battery சதவீதம், அன்றைய நாள் மற்றும் நேரம், மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை ஆகிய விவரங்கள் தோன்றி இறுதியாக EVM IS READY என்ற விவரம் வெளியாகும். VVPAT கருவியில் 7 Paper Slips துண்டாகி VVPAT கருவியினுள் விழும். இது வழக்கமான ஒன்றாகும்.

www.Padasalai.Net

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் –2 இணைத்தல் மாதிரி வரைபடம்



# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பழுது ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்?

# LINK ERROR

- Control Unit –ல் “Link Error” என திரையில் வரப்பெறின்: VVPAT மற்றும் BU கருவிகள் முறையாக இணைக்கப்படவில்லை என பொருள்படும். மீண்டும் ஒருமுறை சரியாக இணைக்க வேண்டும்.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பழுது ஏற்படும்போது என்ன செய்ய வேண்டும்?

❖ கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) –ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| POWER ON LED NOT OK | CU POWER ON LED is not OK |
| BUZZER NOT OK | CU BUZZER is not OK |
| BUSY LED NOT OK | CU BUSY LED is not OK |
| DIGIT 02 NOT OK | Control Unit display is not OK |
| CHANGE BATTERY | CU battery is not within the threshold set |
| BU01 KEY06 NOT OK | BU I Candidate key 6 is not OK |

# கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) -ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| SELF CHECK IN PROGRESS | CU self-check status. It will display before self-diagnostics and after completion of self-diagnostics. |
| DTE 16-07-18 TME 09-10-25 | Current date in DD-MM-YY and time in HH-MM-SS format |
| SL NUM BCUAA00001 | Internal serial number of the Control Unit mentioned on the back side of CU |
| CANDIDATES 10 | The machine is set for 10 candidates. The candidates can vary from 03 50 384 (including NOTA) |
| BATTERY HIGH 95 PERCENT | The status of the Battery 'HIGH' depending on the battery current consumption |

## கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) -ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| BATTERY MEDIUM 73 PERCENT | The status of the Battery is 'MEDIUM' |
| BATTERY LOW 45 PERCENT | The status of the Battery is 'MARGINAL' |
| CHANGE BATTERY | The status of Battery is below Marginal. |
| DISCOVERING UNITS | Units connected are discovering |
| DISCOVERED BU 01 | After discovering units. If one BU is connected the said display will appear on Display Panel. |
| DISCOVERED BU 01 BU 02 | After discovering units, If two BUs are connected, the said display will appear on Display Panel |

www.Padasalai.Net

# கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) -ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| BU01 GN1 TESTING | CU is authenticating with the BU |
| BU01 GN1 OK | CU authenticated the BU |
| BU01 GN1 NOT OK | Authentication of the BU 01 failed (message BLINK on when any key press on CU) |
| BU01 NOT RESPONDING | When communication time out occurs during communication with the BU or BU position (thumbwheel switch) not set properly. |
| BU NOT CONNECTED | CU not detected BU when CU is in CLEAR state or BALLOT state. |
| NO UNITS CONNECTED | No units are connected with CU |

# கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) –ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| "INCORRECT NUMBER OF BU" and "PRESS BALLOT KEY" | When CU is in Clear state or Ballot state, if the number of Bus connected are not matching with the number of candidates set. |
| EVM IS READY | If user presses the BALLOT key or when the correct number of BUs are connected. |
| PRESSED ERROR BU01 | If a key is stuck on the BU |
| Disconnect BU02 | If the number of candidates configured is 5 (for 1 BU) and number of Bus connected is two. |
| BU02 NOT CONNECTED | If the number of candidates configured is 26 (for 2 BUs) and number of Bus connected is 1. |

# கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) –ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| INVALID | A button on the Control Unit has been pressed out of sequence. |
| FULL | The maximum number of votes (2000) for which the machine is designed has been polled. |
| CLOCK ERROR | RTC time and date is not OK |
| INOPERATIVE | The Control Unit cannot be further used. |
| ELECTION EXCEEDED | Date has changed since the first vote recorded in the EVM (when time crosses midnight 12 PM) |
| TOTAL POLLED VOTES 50 | Total number of votes polled is 50 |

www.Padasalai.Net

# கட்டுப்பாட்டு இயந்திரம் (Control Unit) -ல் தோன்றும் குறுஞ்செய்திகளும் அதன் விளக்கமும்

| DISPLAY ON CU | MEANING OF THE DISPLAY |
|---|---|
| COMPUTING RESULT | RESULT is getting computed. |
| PST 07-13-59 PET 16-06-18 | Poll Starting Time and Poll End Time |
| DELETING POLLED VOTES | Deleting of the Polled vote from CU |

# மாதிரி வாக்குப்பதிவு செய்வதற்கான முறை

1) ஒரு வாக்குச்சாவடியில் மாதிரி வாக்குப்பதிவு நடைபெறவில்லையெனில், அந்த வாக்குச்சாவடியில் வாக்குப்பதிவே நடைபெறவில்லை என பொருள்கொள்ளப்படும் என்பதால், மாதிரி வாக்குப்பதிவை மிகவும் கவனமுடன் செய்ய வேண்டும்.

2) 19.04.2024 அன்று காலை 5:30 மணிக்கு மாதிரி வாக்குப்பதிவினை முகவர்கள் முன்னிலையில் நடத்த வேண்டும். முகவர்கள் எவரும் வரவில்லை எனில் 5.45 மணி வரை காத்திருந்து பின்னர் மாதிரி வாக்குப்பதிவை தொடங்க வேண்டும்.

3) மாதிரி வாக்குப்பதிவின் போது குறைந்தபட்சம் 50 வாக்குகளை பதிவு செய்ய வேண்டும்.